ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2105/14 - 2019 ජනවාරි මස 07 වැනි සඳුදා - 2019.01.07
*2105/14 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ARA/LAND/ACQV1/D3/41.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/15/2016/VE/414.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில், அரனாயக பிரதேச செயலாளர் பிரிவில், துன்பாலாதா பத்துவ சிறு பிரிவு, இலக்கம் 42 ஏ, துல்தெனிய கிராம அலுவலர் பிரிவின், துல்தெனிய கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.06.22 ஆந் திகதியுடைய ஆ.கி.கே. 3603 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித் துண்டு 01, 02 எனக் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் ஏறத்தாழ 0.8159 ஹெக்டேயார்கள் விஸ்தீரணமான துல்தெனிய வத்த என்னும் காணியின் எல்லைகள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 01 - துல்தெனிய வத்த ; விஸ்தீரணம்: 0.3698 ஹெக்டயார்.**

வடக்கு: பாதை (பிரதேச சபை) மற்றும் துல்தெனிய வத்த; கிழக்கு: துல்தெனிய வத்த ; தெற்கு: துல்தெனியவத்த ; மேற்கு: பாதை (பிரதேச சபை)

**வேறு விபரம்** :- காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் காணிக்கு உரிமை கோருபவர்கள், தம்பரவ, தல்கஸ்பிடிவில் வசிக்கும் திரு. எஸ். ஓ. என். என். மூர்த்தி மற்றும் அஹலகஸ்தன்ன, கவிலிபிடிய, அரனாயக்கவில் வசிக்கும் திரு. பி. டி. விமலசேன, எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக.

02. **துண்டு இல. 02 - துல்தெனிய வத்த ; விஸ்தீரணம்: 0.4461 ஹெக்டயார்.**

வடக்கு: வரண்ட அருவி (மலஎல) மற்றும் துல்தெனிய வத்த; கிழக்கு: துல்தெனிய வத்த, மற்றும் பாதை (பிரதேச சபை) ; தெற்கு: பாதை (பிரதேச சபை), பாதை மற்றும் துல்தெனிய வத்த ; மேற்கு: வரண்ட அருவி (மலஎல).

**வேறு விபரம்** :- காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் காணிக்கு உரிமை


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

கோருபவர்கள், தம்பரவ, தல்கஸ்பிடிவில் வசிக்கும் திரு. எஸ். ஓ. என். என். மூர்த்தி மற்றும் அஹலகஸ்தன்ன, கவிலிபிடிய, அரனாயக்கவில் வசிக்கும் திரு. பி. டி. விமலசேன, எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு, அருனாயக்க பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இஸட். ஏ. எம். பைசல்,
பிரதேச செயலாளர்,
அரனாயக்க.

பிரதேச செயலகம்,
அரனாயக்க,
2019, சனவரி 04.

01- 518

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.